செய்தி வெளியீடு எண்:314 நாள் :19.06.2014

# தமிழ்நாடு வனத்துறை

## வனத்துறை அலுவலர்கள் திட்ட பணிகளை நிறைவேற்றுவதில் வேகம் காட்ட வேண்டும் மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் திரு எம்.எஸ்.எம்.ஆனந்தன் அவர்கள் வேண்டுகோள்.

தமிழ்நாடு வனத்துறையில் உள்ள உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் திரு எம்.எஸ்.எம்.ஆனந்தன், அவர்களால் 17.06.2014 மற்றும் 18.06.2014 ஆகிய நாட்கள் சென்னை, பனகல் மாளிகை வனத்துறை கூட்ட அரங்கில் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலர், திரு உறன்ஸ் ராஜ் வர்மா,இஆப., அவர்கள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு வினோத் குமார்,இ.வ.ப., மற்றும் வனத்துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நூல் வெளியீடு

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு வனத்துறை அமைச்சர் வனத்துறை மூலம் தயாரிக்கப்பட்ட 'கானுயிர் மீட்பு–களத்தில் கண்டதும் கற்றதும்' எனும் நூலின் முதல் பிரதியினை வெளியிட்டார். அதனை அரசு முதன்மை செயலாளர் திரு உறன்ஸ் ராஜ் வர்மா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் 2013–14ஆம் நிதியாண்டில் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வன வளர்ச்சி திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

ஆய்வு செய்த மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வனத்திட்ட பணிகளை துரிதமாகவும் அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சனைகளை விரைவாகவும், விவேகமாகவும் தீர்த்து வைக்கவும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமையில் பீடுநடை போடுகின்ற இந்த வேளையில் பல்வேறு புதிய வனத்திட்டங்களை தீர்க்க தரிசனத்தோடு தீட்டி செயல்படுத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வனத்துறை அதிகாரிகள் வனத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## மாபெரும் மரம் நடவுத்திட்டம்

தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையினை அதிகரிக்க 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டில் ரூ.43.35 கோடி மதிப்பீட்டில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 65வது பிறந்த நாளில் 65 லட்சம் மரக் கன்றுகள் நடவு செய்ததில் 100 விழுக்காடு நிறைவு பெற்றுள்ளது மற்றும் 2013–14ஆம் ஆண்டில் ரூ.49.18 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 66வது பிறந்த நாளில் 66 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும் மாபெரும் மரம் நடவுத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற முன்னேற்றங்கள் குறித்து விரிவான ஆய்வினை செய்து திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவது தொடர்பாக அறிவுரைகள் வழங்கினார்.

மேலும் 2013ஆம் ஆண்டு வனத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி 110ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கநிலை குறித்தும் கலந்தாலோசித்தார். புதிய திட்டங்களை முனைப்புடன் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என திட்ட செயலாக்க அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## மனித வன உயிரின மோதல் தடுப்பு நடவடிக்கைகள்

வன உயிரினங்கள் வனத்திற்கு வெளியே வந்து அவ்வப்போது மனித உயிர்களுக்கும் பயிர்களுக்கும் கால்நடைகளுக்கும் உடைமைகளுக்கும் சேதங்கள் விளைவிக்கின்றன. இதனை தவிர்க்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்ப்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி வன மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வால்பாறை ஆகிய பகுதிகளிலும் யானை புகா அகழிகள் அமைத்தல் நீர்த்துளைகள் மற்றும் தொட்டிகள் அமைத்தல், சாடிவாயல் பகுதியில் நிரந்தர கும்கி யானை முகாம் அமைத்தல், சூரிய மின்வேலி அமைத்தல், யானைகள் வருவதை முன்கூட்டியே அறிவிக்கை செய்யும் உபகரணங்களை வால்பாறை பகுதியில் பொருத்தும் பணி மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் ரூ.11.37 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் 2012–13ஆம் ஆண்டில் ரூ.10.28 கோடி செலவிலும், 2013–14ஆம் ஆண்டில் ரூ.26.85 கோடி செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வனப்பகுதிகளில் தீவன மரங்களை வளர்த்தல் மற்றும் வனவிலங்கு உறைவிடங்களை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் 2011–12ஆம் ஆண்டில் ரூ.3.29 கோடி செலவிலும் 2012–13ஆம் ஆண்டில் ரூ.5.04 கோடி செலவிலும் மற்றும் 2013–14ஆம் ஆண்டில் ரூ.5.41 கோடி செலவிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பணிகள் நடப்பு நிதியாண்டில் ரூ.4.17 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வன விலங்குகளுக்கு குடிநீர் வசதி**

வன விலங்குகளுக்கு குடிநீர் வசதி செய்திட சூரிய சக்தியில் நீரிறைக்கும் இயந்திரங்களை பொருத்தும் 30 பணிகள் ரூ.2.81 கோடி செலவில் 4 புலிகள் காப்பகங்களிலும் தலா ஒரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய ஆழ்துளை

கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 26 இடங்களில் ஆழ்துறை கிணறுகளுடன் கூடிய நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**வன உயிரினங்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி**

வன உயிரினங்களால் மனித உயிரிழப்பிற்கு சென்ற ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டு வந்த நிவாரண தொகை ரூ.1.50 லட்சத்தை ரூ.3.00 லட்சமாக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 17.08.2011 அன்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணையின்படி 2011–12ஆம் ஆண்டில் 2790 நிகழ்வுகளுக்கு ரூ.2.59 கோடியும் 2012–13ம் ஆண்டில் 2598 நிகழ்வுகளுக்கு ரூ.3.21 கோடியும், மற்றும் 2013–14ம் ஆண்டில் 1464 நிகழ்வுகளுக்கு ரூ.2.76 கோடியும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

வன உயிரினங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு தங்குதடையின்றி நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்தில் சுழல் நிதி உருவாக்கப்பட்டு அதற்கு ஒருகட்ட மானியமாக (one time Grant) ரூ.250.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து 15.06.2012ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள் ஆய்வு கூட்டத்திலும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வனத்துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார். திட்டச்செயலாக்கத்தின் போது ஏற்படுகிற பிரச்சனைகளை அதிகாரிகள் எடுத்துச் சொன்னார்கள். அவைகளை களைவதற்கான அறிவுரைகளை மாண்புமிகு அமைச்சர் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) திரு லட்சுமி நாராயன்,இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர், தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் திரு ஆர்.கே.ஒஜா,இவப., அவர்கள் தமிழ்நாடு மேக்னிசைட் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு த.சேகர்,இவப., மற்றும் வனத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு வினோத் குமார், வரவேற்புரை ஆற்றினார். அரசு முதன்மை செயலர் (சுற்றுச்சூழல் மற்றும் வனம்) திரு உறன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இறுதியாக விருதுநகர் வனப்பாதுகாவலர் திரு ஆ.வெங்கடேஷ். நன்றியுரை ஆற்றினார்.

செய்தி வெளியிடுபவர்
இணை இயக்குநர் (விளம்பரம்)
வனத்துறை,

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**